தினகரன்
ஒரு புதிய அனுபவம்

# Dinakaran

Chennai Date: 18.01.2008 Page no:18





சினிமா தயாரிப்பாளர் எல்.வி.பிரசாத்தின் நூற்றாண்டு விழா முதல்வர் கருணாநிதி தலைமையில் சென்னையில் நேற்று நடந்தது. அப்போது முதல்வருக்கு எல்.வி.ரமேஷ் பிரசாத் சால்வை அணிவிக்கிறார். அருகில் மத்திய அமைச்சர் தாசரி நாராயணராவ்.

### கருணாநிதி புகழாரம்

# சொன்னதை செய்வதில் எல்.வி.பிரசாத் உறுதிமிக்கவர்

சென்னை, ஜன. 18: 'திரைப்பட தயாரிப்பாளர் எல்.வி.பிரசாத்தின் ஆற்றல், மனஉறுதி, சமுதாய உணர்வை நாமும் பெற வேண்டும். அதுதான் அவருக்கு நாம் செய்யும் மரியாதை' என்று முதல்வர் கருணாநிதி கூறினார்.

திரைப்பட தயாரிப்பாளர் எல்.வி.பிரசாத் நூற்றாண்டு விழா சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று நடந்தது. விழாவுக்கு தலைமை தாங்கி, முதல்வர் கருணாநிதி பேசியதாவது:

இந்த விழாவில் பங்கேற்பது நான் ஆற்றவேண்டிய கடமைகளில் ஒன்று. நன்றி காட்ட வேண்டிய கடமைகளில் ஒன்று. பிரசாத் மிகமிக சாமான்யராக வாழ்வை தொடங்கி சரித்திரத்தில் இடம் பெற்றவர். எங்களைப் போன்றவர்களிடம் அவர் வைத்திருந்த அன்பை நான் மீண்டும் சொல்லத் தேவையில்லை. இங்கே மனோகரா படத்தில் ஒரு காட்சியை காட்டினார்கள். நடிகர் திலகம் சிவாஜியின் கம்பீரம், நான் எழுதிய உரையாடலுக்கு கிடைக்க வேண்டிய உத்வேகம் ஆகியவை பிரசாத்தின் உபயமாகும்.

சரோஜாதேவி பேசும்போது ஒரு படத்தில் அவர் கூடுதலாக கேட்ட தொகையை படம் நூறு நாள் ஓடினால் தருகிறேன் என்று கூறி, நூறு நாள் ஓடியதும் அந்த தொகையை தந்ததாக குறிப்பிட்டார். என் வாழ்விலும் அது போன்ற சம்பவம் நடந்தது. நான் எல்.வி.பிரசாத் தயாரிப்பில் மனோகரா, இருவர் உள்ளம், தாயில்லா பிள்ளை ஆகிய படங்களுக்கு உரையாடல் எழுதினேன். மனோகரா வெளிவந்து வெற்றிகரமாக ஓடியதும், இருவர் உள்ளம் படத்துக்கு உரையாடல் எழுதினேன். இதற்கிடையில், தாயில்லா பிள்ளை படத்தில் நான் கேட்ட தொகை ஒன்று, அவர் தருவதாக கூறிய தொகை ஒன்று. இந்த படம் நூறு நாள் ஓடினால் மேலும் பத்தாயிரம் தருகிறேன் என்றார். சரோஜாதேவிக்கு 25 ஆயிரம் தருவதாக கூறினார். அவர் நடிகை. நான் உரையாடல் எழுதுபவன். எனவே, எனக்கு பத்தாயிரம் தருவதாகக் கூறினார். அந்த படம் நூறு நாள் ஓடியது. நூறாவது நாளில் என் வீட்டுக்கு வந்த பிரசாத், பத்தாயிரத்தை கொடுத்து தான் சொன்ன உறுதி மொழியை நிறைவேற்றி விட்டதாக கூறினார். நான் அதிர்ந்துபோனேன். இப்படியும் மனிதர்கள் திரையுலகில் இருக்கிறார்கள் என்று.

இன்னொரு படத்துக்கு வேறு பட அதிபர் இதேபோல படம் நூறு நாள் ஓடினால் 50 ஆயிரம் தருவதாக என்னிடம் கூறினார். ஆனால், 99வது நாளிலேயே படத்தை நிறுத்தி விட்டார். நாகரிகம் கருதி, நான் அவரைப் பற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லை. இப்படிப்பட்ட உலகில், சொன்னதை செய்வோம் என்ற உறுதி மனப்பான்மை கொண்டவர் பிரசாத். தாயில்லா பிள்ளை படம், சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை கொண்டதாகும். தலித் வீட்டுப் பிள்ளை அய்யர் வீட்டிலும், அய்யர் வீட்டுப் பிள்ளை தலித் வீட்டிலும் வளர்ந்து, எதிர்ப்புகளை தாங்குவதே கதை. இந்த படம் ஓடாது என்று ஆருடம் சொல்லப்பட்டது. ஆனால், துணிந்து புரட்சிகரமான சமூக கருத்துகொண்ட படத்தை தயாரித்த பெருமை பிரசாத்துக்கு உண்டு.

அவர் மிக எளிமையானவர். ஏழைகளுக்காக பரிதாபப்படக்கூடியவர். அதே நேரம் ஆதிக்ககாரர்களுக்கு அடிபணியாத வீரமும், தீரமும் கொண்டவர். அவரது இழப்பு திரையுலகுக்கு பெரும் இழப்பு. அவரது எண்ணம், மன உறுதி, ஆற்றல், திறமை, சமுதாய உணர்வை நாம் பெற வேண்டும். அதுதான் அவருக்கு நாம் செலுத்தும் மரியாதை ஆகும்.

இவ்வாறு முதல்வர் கருணாநிதி பேசினார்.

விழாவில் மத்திய நிலக்கரித் துறை இணை அமைச்சர் தாசரி நாராயணராவ், நடிகர் கமலஹாசன், இந்தி நடிகர் ஜிதேந்திரா, டைரக்டர்கள் கே.பாலசந்தர், மணிரத்னம், நடிகைகள் அஞ்சலிதேவி, சவுகார் ஜானகி, சரோஜா தேவி ஆகியோர் பேசினர். எல்.வி.பிரசாத் மகன் ரமேஷ் பிரசாத் வரவேற்றார். விழாவில் எல்.வி.பிரசாத் வாழ்க்கை வரலாறு, தயாரித்த படங்களின் தொகுப்பு காண்பிக்கப்பட்டது.